"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2018

## தமிழ்மொழி ஆண்டு 5

**நேரம்: 120 நிமிடம்** **சுட்டெண்:** ____________________

### பகுதி -1

**வினாத்தாளில் விடை எழுதுக.**

**1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. தமிழிலுள்ள மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை
(பன்னிரண்டு, பதினெட்டு, முப்பது)

2. ஒரு கருமத்தைத் தொடங்கும்போது நாம் பார்க்கவேண்டியது
(தொண்டு, காலம், ஒழுக்கம்)

3. பாரதியாரின் இயற்பெயர்
(சுப்புரத்தினம், சுப்பிரமணியன், மயில்வாகனன்)

4. இருபத்தைந்தாவது ஆண்டின் நிறைவிற் கொண்டாடப்படுவது
(வைரவிழா, பொன்விழா, வெள்ளிவிழா)

5. எலிக்குக் குஞ்சு போல கீரிக்கு
(குட்டி, பிள்ளை, கன்று)

6. இளமையில் சோம்பல் முதுமையில்
(செழுமை, வறுமை, செல்வம்)

7. தலையில் முடிவைத்த பழம். அது
(தோடை, எலுமிச்சை, அன்னாசி)

8. காலத்தைக் காட்டுவது
(பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல்)

9. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவை
(ஐம்பூதம், ஐம்பொறி, ஐம்புலன்)

10. 'தங்கத்தாத்தா' என அழைக்கப்படுபவர்
(சின்னத்தம்பிப்புலவர், சோமசுந்தரப்புலவர், வேந்தனார்)

11. எதிர்கால இடைநிலைகள்
(கின்று கிறு, ப் வ், த் ட் ற் இன்)

12. தந்தை சேர்த்து வைத்த பணத்தைத் தனயன் கண்மூடித்தனமாகச் செலவிட்டான். கண்மூடித்தனம் என்பது
(நித்திரைசெய்தல், கடன்படுதல், வீண்செலவு செய்தல்)

13. சேரன் வறுமையினால் எலும்பும் தோலுமாகக் காணப்பட்டான்.
இதில் எலும்பும் தோலும் என்பது
(இரட்டைக்கிளவி, அடுக்குமொழி, இணைமொழி)

14. 'இடும்பைகூர் என் வயிறே உன்னோடு வாழ்தல் அரிது' என ஔவையார் கூறினார்.
இதில் வந்துள்ள உரிச்சொல்
(அரிது, கூர், ஓடு)

15. பன்னாட்டு மனித உரிமைகள் நாளாகக் கொண்டாடப்படுவது
(டிசெம்பர் 10, நவம்பர் 20, பெப்ரவரி 21)

(15×1=15 புள்ளி)

**2. ஒத்தபொருட்சொல் எழுதுக.**

1. கண் ____________________
2. உண்மை ____________________
3. இன்பம் ____________________
4. அஞ்சல் ____________________
5. மதி ____________________
6. ஆர்வம் ____________________ (6×1=6 புள்ளி)

**3. எதிர்ப்பொருட்சொல் எழுதுக.**

1. அண்மை ____________________
2. காடு ____________________
3. ஒளி ____________________
4. ஆக்கம் ____________________
5. அகம் ____________________
6. உயர்வு ____________________

(6×1=6 புள்ளி)

**4. சேர்த்தெழுதுக.**

1. ஆடல் + கலை = ____________________
2. புதுமை + ஆண்டு = ____________________
3. தாளம் + நயம் = ____________________
4. தலை + நகரம் = ____________________
5. வடக்கு + கிழக்கு = ____________________
6. தொலை + தொடர்பு = ____________________

(6×1=6 புள்ளி)

**5. பிரித்தெழுதுக.**

1. கெண்டைமீன் = ____________ + ____________
2. மாங்காய் = ____________ + ____________
3. ஆடித்திங்கள் = ____________ + ____________
4. தமிழறிவு = ____________ + ____________
5. முக்கோணம் = ____________ + ____________
6. சொற்களஞ்சியம் = ____________ + ____________

(6×1=6 புள்ளி)

**6. கீழ்க்காணும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுக்குள் வகைப்படுத்துக.**

| | | | | |
|---|---|---|---|---|
| சிரித்தான் | உழவன் | தொழிலாளர் | எழுதினான் | பாய்கின்றது |
| மாணவர்கள் | ஓடின | தின்றது | வந்தாள் | மேய்ந்தன |
| பாடினாள் | கதைக்கிறாள் | பறவை | மான்கள் | விளையாடினர் |
| புலவர்கள் | எழிலன் | வண்டு | பழங்கள் | தோழி |

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(20×¼=5 புள்ளி)

**7. கீழ்க்காணும் திருக்குறள்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| ஒருவற்கு | அகத்தூய்மை | இன்சொலன் |
| படும் | மற்றுப் | வாய்மையால் |

1. பணிவுடையன் ______________________ ஆதல் ______________________

   அணியல்ல ______________________ பிற.

2. புறத்தூய்மை நீரா னமையும் ______________________

   ______________________ காணப் ______________________

(6×½=3 புள்ளி)

**8. கீழ்க்காணும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியங்கள் எழுதுக.**

1. ஆடு

   பெயர்:

   ______________________________________________

   வினை:

   ______________________________________________

2. மதி

   பெயர்:

   ______________________________________________

   வினை:

   ______________________________________________

(4×1=4 புள்ளி)

**9. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. செய்தித்தாள்களின் வகைகள் எவை? 1 புள்ளி

2. பாரதியார் பாடிய பாடல்கள் எவை? 1 புள்ளி

3. யாழ்ப்பாணத்தை முதலில் கைப்பற்றிய ஐரோப்பியர் யார்? 1 புள்ளி

4. பெயர்ச்சொற்களின் வகைகளைத் தருக. 1 புள்ளி

5. சொற்புணர்ச்சி என்றால் என்ன? அதன் இருபிரிவுகளைத் தருக. 2 புள்ளி

**10. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 60 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. செய்தித்தாள்
2. பாரதியார்
3. பிறந்தநாள் அழைப்பிதழ்

8 புள்ளி

## பகுதி – 2

**1. அ. கீழ்க்காணும் வாக்கியங்களை உமக்குத் தெரிந்த பிறமொழியில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. நான் அஞ்சல் அனுப்பினேன்.

___________________________________________

2. இன்று சனிக்கிழமை.

___________________________________________

3. நன்றி மறவோம்.

___________________________________________

4. மாணவர்கள் விளையாடினார்கள்.

___________________________________________

5. உறவினர் வந்தனர்.

___________________________________________

6. கவிதை பாடுவோம்.

___________________________________________

(6×½=3 புள்ளி)

**ஆ. அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன்கீழ்க் கோடிடுக.**

ஈழத்தின் மத்தியபகுதியிலே மலையகம் அமைந்துள்ளது. இங்கு நிலம் (மேடும்பள்ளமுமாக / சமதரையாக)க் காணப்படும். மேடுகள் எல்லாம் பற்பல வடிவங்கொண்ட (குன்றுகளாக / குழிகளாக) விண்ணைத்தொட்டு நிமிர்ந்து நிற்கும். மலைமுகடுகளில் முகிற்கூட்டங்கள் (தவள்ந்து / தவழ்ந்து) விளையாடும். (படாரென / சோவென) மழைபொழியும். மலைப்பாம்புகள் வளைந்து வளைந்து ஓடுவதைப்போன்று சிற்றாறுகளும் பேராறுகளும் (மேட்டை / பள்ளத்தை) நோக்கி விரைந்தோடும். சிற்சில இடங்களில் அவை உயரத்திலிருந்து கீழ்நோக்கிக் குதிக்கும். அவை அருவிகள் என அழைக்கப்படும். அவ் அருவிகள் வெண்ணுரை கக்கிக் (கலீர்கலீர் / கலகல) எனச் சிரிப்பது போல் இருக்கும்.

(6×1=6 புள்ளி)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

உழைத்துக் களைத்த மக்களுக்கு ஓய்வுதேவை. ஓய்வை விரும்பும் மக்கள் அதற்கு ஏற்ற இடங்களை நாடிச் செல்கிறார்கள். பூங்கா, கடற்கரை, வயல்வெளி, நூலகம் என்பவை மக்கள் அமைதியை விரும்பிச்செல்லும் இடங்கள் ஆகும். பூங்காவும் ஓய்வு பெறுவதற்கு ஏற்ற இடமாகும். பூங்காவை நந்தவனம், பூந்தோட்டம் என்றும் அழைப்பர். இப்பூங்காக்களை அரசாங்கம் அமைத்துப் பாதுகாத்து வருகின்றது. ஆரவாரம் மிகுந்த நகர்ப்பகுதிகளில் வாழும் மக்கள் அமைதியாகப் பொழுதைப் போக்குவதற்கும் தூய்மையான காற்றைச் சுவாசிப்பதற்கும் இப்பூங்காக்கள் உதவுகின்றன. அத்துடன் நகரத்தின் அழகையும் மேம்படுத்துகின்றன.

1. மக்கள் ஓய்வை விரும்பி நாடிச் செல்லும் இடங்கள் எவை?

_______________________________________________

2. பூங்காவின் மறுபெயர்கள் எவை?

_______________________________________________

3. பூங்காக்களால் மக்கள் அடையும் நன்மைகள் எவை?

_______________________________________________

4. உழைத்துக் களைத்த மக்களுக்கு எது தேவை?

_______________________________________________

5. நகரங்களுக்கு அழகைக் கொடுக்கும் இடங்களில் ஒன்று தருக.

_______________________________________________

6. பூங்காக்களை அமைத்துப் பாதுகாத்து வருவது எது?

_______________________________________________

(6×1=6 புள்ளி)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |